(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

# தேசிய வெளிக்கள நிலையம் தொண்டைமானாறு

## நான்காம் தவணைப் பரீட்சை - 2024

# National Field Work Centre, Thondaimanaru.

## 4th Term Examination - 2024

FWC

| | | | | |
|---|---|---|---|---|
| பொருளியல் - I<br>Economics - I | Two Hours<br>Gr : 13 (2023) | 21 | T | I |

**அறிவுறுத்தல்கள் :-**

- **எல்லா வினாக்களுக்கும் விடை தருக.**
- **விடைத்தாளில் தரப்பட்டுள்ள இடத்தில் உமது சுட்டெண்ணை எழுதுக.**
- **விடைத்தாளின் மறுபக்கத்தில் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களைக் கவனமாக வாசித்துப் பின்பற்றுக.**
- **1 தொடக்கம் 20 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் (1), (2), (3), (4), (5) என இலக்கமிடப்பட்ட விடைகளில் சரியான அல்லது மிகப் பொருத்தமான விடையைத் தெரிந்தெடுத்து, அதனைக் குறித்து நிற்கும் இலக்கத்தைத் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கு அமைய விடைத்தாளில் புள்ளடி (X) இடுவதன் மூலம் காட்டுக.**

## பகுதி – I

01. பொருளியல் விஞ்ஞானம் தோற்றம் பெற்றமைக்குரிய மூலகாரணம் பின்வருவனவற்றுள் எது?
   1. வரையறையற்ற மனித விருப்பங்கள்
   2. வரையறுக்கப்பட்ட வளங்கள்
   3. வரையறுக்கப்பட்ட மனித தேவைகள்
   4. வளங்களை பொருளாதாரச் செலவுடன் பெற்றுக்கொள்ளல்.
   5. வளங்களின் அருமைத்தன்மை

02. A - வரையறுக்கப்பட்ட நிரம்பலைக் கொண்டிருக்கும்

   B - நேரான எல்லைச் செலவினையும் விலையினையும் கொண்டிருக்கும்.

   C - வணிக மதிப்பு அற்றதாகக் காணப்படும்.

   D - பூச்சிய எல்லைச் செலவினையும் நேரான/ அமையச் செலவினையும் கொண்டிருக்கும்.

   E - உற்பத்தியில் அமையச் செலவினை கொண்டிருக்கும்.

   மேலுள்ள விடயங்களில் பொருளாதாரப் பண்டத்திற்குரியதான பண்பினைக் கொண்ட விடயம் எது?

   1. A, B, C  2. B, C, D  3. C, D, E  4. A, B, E  5. B, C, E

03. தாராள சந்தைப் பொருளாதாரத்தின் குறைபாடுகளுக்குள் **உள்ளடங்காத** விடயம் ஒன்று.
   1. வருமானம், செல்வத்தின் ஏற்றத்தாழ்வு அதிகமாயிருத்தல்.
   2. சமூக நலப் பண்டங்கள் போதியளவில் நிரம்பல் செய்யப்படாமை.
   3. புத்தாக்கத்தின் மூலம் உற்பத்தித்தரம் அதிகரித்தல்.
   4. உற்பத்தி, நுகர்வு நடவடிக்கைகளின் வெளிவாரி செலவுகளை ஒழுங்குபடுத்துவதில் தோல்வி ஏற்படுதல்.
   5. பேரினப் பொருளாதாரத்தில் நிலையற்ற தன்மை காணப்படுதல்.


(All Rights Reserved/ *முழுப்பதிப்புரிமை உடையது)*

04. வளங்கள் சகல பொருளாதார நடவடிக்கைகளிலும் ஒன்றுக்கொன்று பூரண பதிலீடாகக் **காணப்படாதபோது** பின்வருவனவற்றுள் எது உண்மையாகும்?
1. உற்பத்தி இயல்தகவு வளையி நேர்கோடாயிருக்கும்.
2. பொருளாதாரமொன்று உற்பத்திக்கு சாத்தியமற்ற பகுதியிலும் உற்பத்தியில் ஈடுபடுவதற்குரிய சந்தர்ப்பம் உருவாகும்.
3. எந்தவொரு நாடும் எந்தவொரு பொருளாதார நடவடிக்கையிலும் ஒப்பீட்டு நன்மையைக் கொண்டிருக்க முடியாது.
4. உற்பத்தி இயல்தகவு வளையி தொடக்கப்புள்ளிக்கு குழிவாக அமைந்திருக்கும்.
5. உற்பத்தி இயல்தகவு வளையி வெளிநோக்கி குழிவாக அமைந்திருக்கும்.

05. உணவு, ஆடை என்றும் இரண்டு பண்டங்களை உற்பத்தி செய்யும் ஒரு நாட்டில் நீடித்த வரட்சி காரணமாக நீண்டகாலப் பகுதிக்கு மின்சாரத்தடை ஏற்படல் உற்பத்திச் சாத்திய வளையியில் எவ்வாறு பிரதிபலிக்கப்படும்.
1. உற்பத்தி சாத்திய வளையி உணவு உற்பத்திக்குரிய அச்சினால் உள் நோக்கி நகரும்.
2. ஆடை உற்பத்தி மாற்றமடையாமலிருக்க உணவு உற்பத்தியில் பின்னடைவை ஏற்படுத்தும்.
3. உணவு, ஆடை ஆகிய இரண்டு அச்சுக்களாலும் உற்பத்திசாத்திய வளையி உள்நோக்கி நகரும்.
4. ஆடை உற்பத்தி அச்சினால் உற்பத்தி சாத்திய வளையி வெளி நோக்கி நகர உணவு உற்பத்தி அச்சினால் உள் நோக்கி நகரும்.
5. உற்பத்தி சாத்திய வளையி நகராமலிருக்க உணவு உற்பத்திக்குரிய வள ஒதுக்கீடு குறைவடையும்.

06. சாதாரண பண்டத்தின் விலை வீழ்ச்சியடையும்போது (ஏனைய விடயங்கள் மாறாத நிலையில்) அதன் கேள்வித்தொகை அதிகரிப்பதற்குரிய காரணம்.
1. நுகர்வோனின் மெய்வருமானம் வீழ்ச்சியும் சார்பு விலை வீழ்ச்சியும்.
2. நுகர்வோனின் மெய்வருமானம் அதிகரிப்பும் சார்புவிலை அதிகரிப்பும்.
3. நுகர்வோனின் மெய்வருமானம் அதிகரிப்பும் சார்புவிலை வீழ்ச்சியும்.
4. நுகர்வோன் பணவருமான அதிகரிப்பும் பதிலீட்டுப் பொருளின் விலை வீழ்ச்சியும்.
5. நுகர்வோனின் மெய்வருமான அதிகரிப்பும் பதிலீட்டுப் பொருளின் விலை வீழ்ச்சியும்.

07. தரப்பட்ட கேள்விக் கோட்டிற்கு பொருத்தமான சமன்பாடு எது?




1. Qd = 1500 – 20p
2. Qd = 1500 – 10p
3. P = 2000 – 0.05Qd
4. Qd= 2000 – 100P
5. Qd = 2000 – 20p

08. பண்டமொன்றின் நிரம்பல் கோட்டினை வரையும்போது கையாளப்படும் எடுகோள்களில் ஒன்று.
1. கைத்தொழில் பண்டத்தினை மட்டும் கவனத்தில் கொள்ளவேண்டும்.
2. பண்டமொன்றின் நிரம்பலைத் தீர்மானிக்கும் அனைத்துக் காரணிகளும் நிலையானதாகக் காணப்பட வேண்டும்.
3. பண்டமொன்றின் நிரம்பலைத் தீர்மானிக்கும் காரணிகளில் கருத்தில் எடுக்கப்படும் பண்டத்தின் விலை மட்டும் மாற்றமடையும்.
4. பண்டமொன்றின் நிரம்பலைத் தீர்மானிக்கும் காரணிகளில் தொடர்புடைய பண்டத்தின் விலை மட்டும் மாற்றமடையும்.
5. பண்டமொன்றின் நிரம்பலைத் தீர்மானிக்கும் அனைத்துக் காரணிகளும் மாற்றமடையும்.

(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

09. பின்வருவனவற்றுள் எது பொருளொன்றின் நிரம்பல் வளையியை வலது புறமாக நகர்த்தும்?
1. தொடர்புடைய பொருட்களின் விலை மாற்றத்தினால் குறித்த பொருளின் சார்பு இலாபம் குறைதல்
2. குறித்த பொருளின் விலையிலேற்படும் அதிகரிப்பு
3. குறித்த பொருள் உற்பத்தியாளர்களுக்கு அரசாங்கம் அறவிட்ட வரியை நிறுத்துதல்
4. குறித்த பொருள் உற்பத்தியாளர்களுக்கு அரசாங்கம் வழங்கிய மானியங்களை நிறுத்துதல்
5. உள்ளீட்டுப் பொருட்களின் விலையில் ஏற்பட்ட அதிகரிப்பு

10. போட்டிச் சந்தையொன்றில் விற்கப்படும் பொருளொன்றின் சந்தைக்கேள்வி, நிரம்பல் வளையிகள் பின்வரும் சமன்பாடுகளால் வெளிப்படுத்தப்படுவதாகக் கருதுக.
$Q_D = 160 – 4P$ $Q_S = -20 + 2P$
சந்தைச் சமநிலையின் போது விலைக்கேள்வி நெகிழ்ச்சி?
1. -2.4 ஆகும். 2. -2.6 ஆகும் 3. -2.8 ஆகும் 4. -3.0 ஆகும் 5. -5.3 ஆகும்.

11. X என்ற பண்டத்தின் கேள்விச்சார்பு Qd=800-5p எனத் தரப்பட்டுள்ளது. எவ்விலை வீச்சினுள் விலைசார் கேள்வி நெகிழ்ச்சியுள்ளதாகக் $(PEd > 1)$ காணப்படும்.
1. ரூபா 10க்கும் 80க்கும் இடையில்
2. ரூபா 20க்கும் 60க்கும் இடையில்
3. ரூபா 60க்கும் 80க்கும் இடையில்
4. ரூபா 10க்கும் 160க்கும் இடையில்
5. ரூபா 80க்கும் 160க்கும் இடையில்

12. X என்ற பண்டத்தின் நிரம்பல் சார்பு Qs= -300+10P எனத் தரப்பட்டுள்ளது.இப்பண்டத்துடன் இசைவான கூற்று எது?
1. எல்லா விலைகளிலும் விலைசார் நிரம்பல் நெகிழ்ச்சி ஒன்றை விட சிறியதாகக் காணப்படும்.
2. எல்லா விலைகளிலும் விலைசார் நிரம்பல் நெகிழ்ச்சி பூச்சியமாகக் காணப்படும்.
3. இங்கு பண்டத்தின் விலை அதிகரிக்கும் போது விலைசார் நிரம்பல் நெகிழ்ச்சி குறைவடையும் அதேவேளை ஒன்றைவிட பெரியதாகக் காணப்படும்.
4. இப்பண்டத்தின் நிரம்பல் கோடானது தொடக்கப் புள்ளிக்கூடாகச் செல்லும்.
5. இங்கு பண்டத்தின் விலை வீழ்ச்சியடையும்போது விலைசார் நிரம்பல் நெகிழ்ச்சி குறைவடைவதோடு நிரம்பல் தொகையும் குறைவடையும்.

13. குறித்தவொரு நுகர்வுப்பொருளின் மிகைக்கேள்வி சார்பும் நிரம்பல் சார்பும் பின்வருமாறு தரப்பட்டுள்ளன.
ED = 1000 - 20P
QS = -100 + 30P
இப்பண்டத்தின் சமநிலைத் தொகையும் சம நிலை விலையும்
1. 1400 அலகுகள் மற்றும் ரூபா 24 ஆகும்.
2. 520 அலகுகள் மற்றும் ரூபா 24 ஆகும்.
3. 1500 அலகுகள் மற்றும் ரூபா 50 ஆகும்.
4. 1400 அலகுகள் மற்றும் ரூபா 50 ஆகும்.
5. 620 அலகுகள் மற்றும் ரூபா 24 ஆகும்.

(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)


14. பின்வரும் தரவுகள் குறிப்பிட்டவொரு காலப்பகுதியில் X பண்டத்தின் சந்தைக்கேள்வி, நிரம்பல் என்பவற்றைக் காட்டுகின்றன.

| விலை | கேள்வித் தொகை | வழங்கல் தொகை |
|---|---|---|
| 80 | 70 | 120 |
| 60 | 80 | 100 |
| 40 | 90 | 80 |
| 20 | 100 | 60 |
| 0 | 110 | 40 |

அரசாங்கம் இப்பொழுது X பண்டத்தின் உற்பத்தி அலகொன்றுக்கு ரூ. 20 வரியை விதிக்குமாயின் அரசுக்குக் கிடைத்த வரிவருமானம் எவ்வளவாகும்?

1. ரூ. 2000 2. ரூ. 1200 3. ரூ. 1600 4. ரூ. 800 5. ரூ. 2400

15. X பொருளின் மீது விதிக்கப்பட்டிருந்த சிறப்பு வரி நீக்கப்பட்ட பின் நிரம்பலானது $S_2$ இலிருந்து $S_1$ ஆக அதிகரிப்பதை பின்வரும் வரைபடம் காட்டுகிறது $S_1$ என்பது வரிக்கு முன்னரான நிரம்பல் வளையியாகவும் வரி நீக்கப்பட்ட பின்னரான நிரம்பல் வளையியாகவும் காபணப்படுகிறது.




வரி நீக்கப்பட்டதன் காரணமாக வரி வருவாய் மற்றும் நுகர்வோர் செலவீடு என்பவற்றின் மீது எவ்வாறான தாக்க விளைவு ஏற்படும்

| | வரி வருவாய் | நுகர்வோன் செலவீடு |
|---|---|---|
| 1. | 1440 ஆல் வீழ்ச்சியடையும் | 2000 ஆல் அதிகரிக்கும் |
| 2. | 480 ஆல் வீழ்ச்சியடையும் | 560 ஆல் வீழ்ச்சியடையும் |
| 3. | 480 ஆல் வீழ்ச்சியடையும் | 560 ஆல் அதிகரிக்கும் |
| 4. | 960 ஆல் அதிகரிக்கும் | 1440 ஆல் அதிகரிக்கும் |
| 5. | 1440 ஆல் வீழ்ச்சியடையும் | 960 ஆல் வீழ்ச்சியடையும் |

16. X என்ற பண்டத்தின் கேள்வி, நிரம்பல் சார்புகள் பின்வருமாறு தரப்பட்டுள்ளது.

$Qd = 600 - 10p$

$Qs = -200 + 10p$

இப்பண்ட உற்பத்தியாளர்களுக்கு அரசு அலகுக்கு 20 ரூபாவை மானியமாக வழங்குவதாகக் கருதுக. மானியத்தின் பின் உற்பத்தியாளன் மிகை எவ்வளவாகக் காணப்படும்.?

1. 7500 ரூபா 2. 6000 ரூபா 3. 10000 ரூபா 4. 4500 ரூபா 5. 45000 ரூபா

17. X பண்டத்தின் சந்தைச் சமநிலையை விட குறைந்த ஒரு உச்சவிலையை நிர்ணயிக்கும் போது சந்தையில் ஏன் மிகைக்கேள்வி ஏற்படுகின்றது.
    1. X பண்டத்தின் கேள்வி அதிகரிப்பும் நிரம்பல் வீழ்ச்சியும்
    2. X பண்டத்தின் கேள்வித்தொகை குறைப்பும் நிரம்பல் தொகை அதிகரிப்பும்
    3. X பண்டத்தின் கேள்வித்தொகை மட்டும் அதிகரித்தல்
    4. X பண்டத்தின் கேள்வித்தொகை, நிரம்பல்தொகை இரண்டும் அதிகரித்தல்
    5. X பண்டத்தின் கேள்வித்தொகை அதிகரிக்கும் அதேவேளை நிரம்பல் தொகை வீழ்ச்சியடைதல்

18. பண்டத்திற்கான கேள்விச்சார்பு Qd = 100 -5P ஆகவும் நிரம்பல் Qs = -20+5P ஆகவும் தரப்படுகிறது. அரசாங்கம் ரூ 15 ஐ குறைந்த பட்ச விலையாக நிர்ணயித்து மிகையினை கொள்வனவு செய்யுமாயின் பொருளாதார மிகையில் ஏற்பட்ட அதிகரிப்பின் பெறுமதி எவ்வளவு?
    1. ரூ450   2. ரூ375   3. ரூ405   4. ரூ45   5. ரூ302.5

19. ‘‘குறைந்து செல்லும் விளைவு விதி’’ யை சரியாக வரைவிலக்கணப்படுத்துவது.
    1. மாறும் உள்ளீடுகளை அதிகரிக்கும்போது சராசரி உற்பத்தி அதிகரித்து செல்லுதல்.
    2. மாறும் உள்ளீடுகளை சம அளவில் அதிகரிக்கும்போது மொத்த உற்பத்தி தொடர்ச்சியாக கூடிச் செல்லும் வேகத்தில் அதிகரிக்கும்.
    3. நிலையான உள்ளீட்டுடன் மாறும் உள்ளீட்டினை சம அளவில் அதிகரிக்கும்போது மாறும் உள்ளீடுடன் எல்லை உற்பத்தி வீழ்ச்சியடைந்து செல்லுதல்.
    4. நிலையான உள்ளீட்டுடன் மாறும் உள்ளீட்டினை சம அளவில் அதிகரிக்கும்போது மாறும் உள்ளீட்டின் சராசரி உற்பத்தி, எல்லை உற்பத்தி அதிகரித்து செல்லுதல்.
    5. சராசரி மாறும் செலவுகள், சராசரிச் செலவுகள், எல்லைச் செலவுகள், வெளியீட்டினை அதிகரிக்கும்போது வீழ்ச்சியடைந்து செல்லுதல்.

20. ஒரு நிறுவனம் தனது சகல உள்ளீடுகளையும் 20% இனால் அதிகரிக்கும் போது அதன் வெளியீடு 40% இனால் அதிகரிக்கிறது. இந் நிலமைக்குரிய காரணம் யாது?
    1. குறைந்து செல்லும் விளைவு விதியாகும்.
    2. குறைந்து செல்லும் அளவுத்திட்ட விளைவு விதியாகும்.
    3. இங்கு நிறுவனம் பயன்படுத்தும் உள்ளீடுகளை பிரித்து பயன்படுத்த முடியாத நிலமை காணப்படுதல்.
    4. இங்கு நிறுவனம் பயன்படுத்தும் உள்ளீடுகள் அழிவடையும் தன்மையைக் கொண்டிருத்தல்.
    5. இங்கு நிறுவனத்தின் மொத்த உற்பத்தி குறையும் வேகத்தில் அதிகரிக்கும் தன்மையினைக் கொண்டிருத்தல்.

21. பின்வரும் அட்டவணை நிறுவனமொன்றின் எல்லைச் செலவை வெளிப்படுத்துகின்றது.

| வெளியீடு (Q) | 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
|---|---|---|---|---|---|---|
| எல்லைச் செலவு (MC) | 400 | 300 | 200 | 300 | 400 | 500 |

இந்நிறுவனத்தின் மொத்த நிலையான செலவு ரூ 2000 எனக் கொள்க. வெளியீடு 4 அலகாக இருக்கும் போது சராசரி மொத்தச் செலவு எவ்வளவாகக் காணப்படும்?
    1. ரூபா 300   2. ரூபா 500   3. ரூபா 800   4. ரூபா 300   5. ரூபா 900

(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

22. தனியுரிமைப் போட்டிச் சந்தையில் காணக்கூடிய பண்பு எது?
    1. இங்கு ஒவ்வொரு நிறுவனத்தினதும் உற்பத்திகள் ஓரினத்தன்மையானவையாக காணப்படும்
    2. நுகர்வோர் சந்தை தொடர்பான பூரண அறிவைக் கொண்டிருப்பர்.
    3. உற்பத்தி மிகவும் சிறப்புத்தன்மை வாய்ந்ததாக காணப்படும்.
    4. இங்கு நெருங்கிய பதிலீட்டினைக்கொண்ட உற்பத்திகள் காணப்படும்.
    5. தொழிலுக்குள் புதிய நிறுவனங்கள் நுழைவதற்கு சட்டரீதியான தடைகள் காணப்படும்.

23. நிறைபோட்டி தொழிலுள்ள நிறுவனமொன்றின் சமநிலை வெளியீட்டு மட்டம் 400 அலகுகளாகும். அவ்வெளியீட்டிற்குரிய சராசரி மாறும் செலவு 28 ரூபாவாகவும் சராசரி நிலையான செலவு 12 ரூபாவாகவும் காணப்பட்டது. அவ்வெளியீட்டு மட்டத்தில் மொத்த இலாபம் 2000 ரூபாவாகும். இந்நிலையில் அந்நிறுவனத்தின் விலை எவ்வளவாகக் காணப்படும்.
    1. ரூபா 50    2. ரூபா 45    3. ரூபா 40    4. ரூபா 75    5. ரூபா 90

24. குறுங்காலத்தில் ஒரு நிறைபோட்டி நிறுவனம் எல்லை வருவாய், எல்லை செலவை விடக் கூடுதலாக உள்ள நிலையில் உற்பத்தியை மேற்கொள்கின்றது. குறுங்கால இலாபத்தை உச்சப்படுத்த இந் நிறுவனம் என்ன செய்ய வேண்டும்?
    1. உற்பத்தி செய்யும் செலவினை அதிகரித்தல்
    2. உற்பத்தி செய்யும் தொகையினைக் குறைத்தல்
    3. எல்லைச் செலவை அதிகரித்தல்
    4. கைத்தொழிலை விட்டு விலகுதல்
    5. உற்பத்தியை அதிகரிக்க வேண்டும், அதன்போது $MC > MR$ ஆகும்.

25. வர்த்தக சகட ஓட்டத்தின் வரிசைக் கட்டங்கள்?
    1. சுருக்கம், விரிவாக்கம், தாழ்வுமட்டம், உச்சம்
    2. சுருக்கம், உச்சம், விரிவாக்கம், தாழ்வுமட்டம்
    3. சுருக்கம், தாழ்வுமட்டம், உச்சம், விரிவாக்கம்
    4. சுருக்கம், தாழ்வுமட்டம், விரிவாக்கம், உச்சம்
    5. சுருக்கம், உச்சம் தாழ்வுமட்டம், விரிவாக்கம்

26. பின்வருவனவற்றில் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் அளவில் பாதிப்பை ஏற்படுத்தாதது எது?
    1. நுகர்வோனொருவன் தனது தனிப்பட்ட உபயோகத்திற்காக புதிய மோட்டார் வண்டியொன்றை கொள்வனவு செய்தல்.
    2. அரசாங்கம் தனது பாதுகாப்பு கற்கை நிறுவனத்திற்காக புதிய பேரூந்து வண்டியொன்றை கொள்வனவு செய்தல்.
    3. நுகர்வோனொருவன் சிகையலங்கார சேவையினைப் பெற்றுக் கொள்ளல்.
    4. ஒரு முதலீட்டாளன் அரியவகை ஓவியமொன்றை ஏலத்தில் கொள்வனவு செய்தல்.
    5. ஒரு நிறுவனம் தனது தொழிற்சாலைக்காக புதிய மின்பிறப்பாக்கி ஒன்றைக் கொள்வனவு செய்தல்.

(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

27. இலங்கையின் தேசிய கணக்கு தொடர்பான விபரங்கள் வருமாறு பெறுமதிகள் யாவும் பில்லியன் ரூபாக்களிலுள்ளது.

| விபரம் | பெறுமதி |
|---|---|
| ஊழியர்களின் நட்டஈடு | 3300 |
| தேறியதொழிற்பாட்டுமிகை | 5900 |
| உற்பத்திமீதானமானியங்களைகழித்த ஏனைய வரிகள் | 450 |
| நிலையான மூலதனநுகர்வு | 800 |
| கலப்புவருமானம் | 750 |
| வெளிநாட்டிலிருந்தானதேறியமுதன்மைவருமானம் | -600 |

இத்தரவுகளின்படி இலங்கையின் மொத்த தொழிற்பாட்டுமிகையின்பெறுமதி எவ்வளவாகக் காணப்படும்

1. 7450 பில்.ரூபா
2. 6350 பில்.ரூபா
3. 6700 பில்.ரூபா
4. 6100 பில்.ரூபா
5. 10150 பில்.ரூபா

28. ஒரு நாட்டின் தேசிய கணக்கு தொடர்பான புள்ளிவிபரம் பின்வருமாறு தரப்பட்டுள்ளது. (பெறுமதிகள் பில்லியன் ரூபாவில்)

| | |
|---|---|
| • தனியார் நுகர்வு | 8000 |
| • பொது நுகர்வு | 7000 |
| • மொத்த உள்நாட்டு மூலதனாக்கம் | 4000 |
| • இருப்பு மாற்றம் | 200 |
| • பொருட்களின் தேறிய ஏற்றுமதி | -2200 |
| • பொருட்களின் இறக்குமதி | 6700 |
| • தேறிய நேரில் வரி | 600 |
| • வெளிநாட்டிலிருந்தான தேறிய முதன்மைவருமானம் | - 400 |
| • வெளிநாட்டிலிருந்தான தேறிய நடைமுறைமாற்றல்கள் | 600 |

இப்பொருளாதாரத்தின் மொத்த உள்நாட்டுஉற்பத்தியையும் தேசியசேமிப்பின் பெறுமதியையும் சரியாகவெளிப்படுத்தும் விடைஎது?

| | மொத்தஉள்நாட்டுஉற்பத்தி | தேசியசேமிப்பு |
|---|---|---|
| 1. | 19000 மில்.ரூபா | 1800 மில்.ரூபா |
| 2. | 16800 மில்.ரூபா | 2000 மில்.ரூபா |
| 3. | 16800 மில்.ரூபா | 1800 மில்.ரூபா |
| 4. | 25700 மில்.ரூபா | 2000 மில்.ரூபா |
| 5. | 17400 மில்.ரூபா | 2000 மில்.ரூபா |

29. எளிய பொருளாதாரத்தின் தன்னிச்சையான நுகர்வு 50 ஆகவும் முதலீடு 100 ஆகவும் பெருக்கியின் பெறுமதி 2.5 ஆகவும் உள்ளதாக கருதுக. பின்வருவனவற்றுள் எது சரியானதாகக் காணப்படும்.

| எல்லைநுகர்வு நாட்டம் (MPC) | | சமநிலைத்தேசிய வருமானம் (Y) |
|---|---|---|
| 1. | 0.4 | 375 |
| 2. | 0.6 | 750 |
| 3. | 0.8 | 375 |
| 4. | 0.6 | 375 |
| 5. | 0.4 | 600 |

(All Rights Reserved/ *முழுப்பதிப்புரிமை உடையது*)

30. வெளிநாட்டுத்துறையற்ற பொருளாதாரமொன்றில் நுகர்வு (C), முதலீடு (I), அரசாங்க கொள்வனவுகள், வரிகள் என்பவற்றின் பெறுமதிகள் பின்வருமாறு தரப்பட்டுள்ளன.

$C = 200 + 0.8yd$ , $I = 300$ , $G = 200$ , $T = 50$

இப்பொருளாதாரத்தின் சமநிலை மட்டத்தேசிய வருமானம் (y) யாது?

1. 3000 2. 3300 3. 3500 4. 3200 5. 6000

31. மூடிய பொருளாதாரமொன்றின் நுகர்வுச்சார்பு $C=400+0.75yd$ என தரப்பட்டுள்ளது. அரசாங்கம் வீட்டுத்துறையின் வருமானத்திற்கு 20% மான வரியை விதிக்கும்போது பின்வருவனவற்றுள் எது உண்மையாகவிருக்கும்.

1. தன்னிச்சையான நுகர்வுமட்டம் வீழ்ச்சியடையும்.
2. தன்னிச்சையான நுகர்வுமட்டம் அதிகரிக்கும்.
3. ஆரம்ப நுகர்வுக் கோட்டிற்கு சமாந்தரமாக புதிய நுகர்வு வளையி இடப்புறம் நகரும்.
4. தன்னிச்சையான நுகர்வு மாறாதிருக்க புதிய நுகர்வு வளையி வலப்புறமாக சுழற்சியடையும்.
5. தன்னிச்சையான நுகர்வு மாறாதிருக்க புதிய நுகர்வு வளையி இடப்புறமாக சுழற்சியடையும்.

32. பின்வரும் அட்டவணை கருதுகோள் ரீதியான ஒரு பொருளாதாரத்தின் பேரினப் பொருளாதாரத் தரவுகள் சிலவற்றைக் காட்டுகிறது. (எல்லா பெறுமானங்களும் பில்லியன் ரூபாவிலாகும்.)

| அரசாங்கக் கொள்வனவுகள் (G) | இறக்குமதிகள் (M) | வரிகள் (T) | முதலீடு (I) | ஏற்றுமதிகள் (X) | சேமிப்புகள் (S) |
|---|---|---|---|---|---|
| 30 | 70 | 40 | 50 | 80 | 60 |

பின்வருவனவற்றுள் இப்பொருளாதாரம் பற்றிய சரியான கூற்று எது?

1. ஏற்றுமதிகள் இறக்குமதிகளை விட உயர்வாக இருப்பதால் பொருளாதாரம் விரிவடையும்.
2. சேமிப்புகள் வரிகளை விட உயர்வாக இருப்பதால் பொருளாதாரம் சுருங்கும்.
3. உட்பாய்ச்சல்கள் வெளிப்பாய்ச்சல்களை விட உயர்வாக இருப்பதால் பொருளாதாரம் விரிவடையும்.
4. வெளிப்பாய்ச்சல்கள் உட்பாய்ச்சல்களை விட உயர்வாக இருப்பதால் பொருளாதாரம் சுருங்கும்.
5. உட்பாய்ச்சல்கள் வெளிப்பாய்ச்சல்களுக்குச் சமமாவதால் பொருளாதாரம் சமநிலையில் இருக்கும்.

33. குறித்த ஒரு ஆண்டில் ஒரு நாட்டின் நுகர்வு, முதலீடு, மற்றும் அரச கொள்வனவுகள் என்பவற்றின் மீதான செலவீடுகள் அந்நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 103 சதவீதமாகக் காணப்பட்டன. இந்நிலை சாத்தியமாவது?

1. பணநிரம்பல் அதிகரிக்கப்பட்டால் மாத்திரமேயாகும்.
2. தேறிய ஏற்றுமதிகள் நேர்கணியமாக இருந்தால் மட்டுமேயாகும்.
3. தேறிய ஏற்றுமதிகள் எதிர்கணியமாக இருந்தால் மட்டுமேயாகும்.
4. அரசாங்கம் பாதீட்டில் ஒரு மிகைநிலையினைக் கொண்டிருந்தால் மட்டுமேயாகும்.
5. அரசாங்கம் சமநிலைப் பாதீட்டைக் கொண்டிருந்தால் மட்டுமேயாகும்.

(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

34. குறித்தவொரு பொருளாதாரம் தற்போது ரூபா 3 000 பில்லியன் சமனிலை வெளியீட்டு மட்டத்தில் தொழிற்படுவதாகவும் நிறைதொழில் மட்டச் சமநிலையினை அடைவதற்கு அது வெளியீட்டினை ரூபா 4 000 பில்லியன் மட்டத்தில் உற்பத்தி செய்ய வேண்டிய தேவையில் உள்ளது எனவும் கருதுக. மேலும் இப்பொருளாதாரத்தின் எல்லைச் சேமிப்பு நாட்டம் 0.2 ஆக உள்ளது. இப்பொருளாதாரம் நிறைதொழில் மட்டச் சமநிலையினை அடைவதற்கு மிகவும் பொருத்தமான கொள்கைச் சிபார்சு யாது?
   1. அரச செலவினத்தை ரூபா 1 000 பில்லியனால் அதிகரித்தல்
   2. அரச செலவினத்தை ரூபா 500 பில்லியனால் அதிகரித்தல்
   3. அரச செலவினத்தை ரூபா 250 பில்லியனால் அதிகரித்தல்
   4. நேர் வரிகளை ரூபா 1 000 பில்லியனால் குறைத்தல்
   5. நேர் வரிகளை ரூபா 250 பில்லியனால் குறைத்தல்

35. பின்வருவனவற்றுள் எது மிகவும் குறைவான திரவத் தன்மையைக் கொண்டது?
   1. திறைசேரி உண்டியல்கள்
   2. சேமிப்பு வைப்புக்கள்
   3. நிலையான சொத்துக்கள்
   4. ஐயாயிரம் ரூபா தாள் நாணயம்
   5. கேள்வி வைப்புக்கள்

36. பின்வரும் பண நிரம்பல் கணிப்பீடுகளில் தவறானது எது?
   1. $M_1$ = பொதுமக்கள் வசமுள்ள நாணயம் + பொதுமக்களின் பெயரில் வர்த்தக வங்கிகளில் உள்ள கேள்வி வைப்புக்கள்
   2. $M_2 = M_1$ + சேமிப்பு தவணை வைப்புக்கள்.
   3. $M_{2b} = M_2$ + சீரமைக்கப்பட்ட வெளி நாட்டு நாணய வைப்புக்கள்.
   4. $M_4 = M_{2b}$ + உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகள் மற்றும் நிதிக் கம்பனிகளில் உள்ள பொதுமக்களின் பெயரிலான அண்மிய பணம்.
   5. $M_0$ = பொதுமக்க்கள் வசமுள்ள நாணயம்.

37. எதிர்பாராத வகையிலான உயர்மட்டப் பணவீக்க விலை அதிகரிப்பு ஏற்படும்போது அதன் மூலம் பெரும்பாலும் நன்மையடையும் குழு பின்வருவனவற்றுள் எது?
   1. ஓய்வூதியம் பெறும் தொழிலாளர்கள்
   2. கடன் வழங்குநர்கள்
   3. சம்பளம் உழைப்போர்
   4. தாம் வேலைசெய்த காலத்தில் பணத்தைச் சேமித்து வைத்துள்ள தற்பொது வயது முதிர்ந்த நபர்கள்
   5. கடன்பெற்றோர்.

38. ஒரு நாட்டின் விரிந்த பண நிரம்பல் 12000 பில்லியன் ரூபாவாகும். வெளி நின்ற நாணயத்தின் அளவு 1000 பில்லியன் ரூபாவும் மத்திய வங்கியிலுள்ள வர்த்தக வங்கிகளின்வைப்புக்கள் 200 பில்லியன் ரூபாவாகவும் காணப்பட்டது. இந் நாட்டின் பணப்பெருக்கியின் பெறுமதி யாது?
   1. 12 மடங்கு  2. 10 சதவீதம்  3. 12 சதவீதம்  4. 24 மடங்கு  5. 10 மடங்கு

(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

39. செலவுத்தூண்டல் பணவீக்கம் நேரடியாக ஏற்படுவது
    1. வரிக் குறைப்பினாலாகும்.
    2. மாற்றல் கொடுப்பனவுகள் அதிகரிப்பதனாலாகும்.
    3. அரசாங்கக் கொள்வனவுகள் அதிகரிப்பதனாலாகும்.
    4. இறக்குமதிப் பருமன் அதிகரிப்பதனாலாகும்.
    5. சம்பளங்கள் உயர்வதனாலாகும்.

40. தேசிய நுகர்வோர் விலைச்சுட்டெண்ணில் (2021=100) உணவு மற்றும் மதுசாரமற்ற குடிவகைகளின் நிறையிடலின் அளவு யாது?
    1. 4.04%　　2. 26.23%　　3. 39.22%　　4. 23.28%　　5. 53.28%

41. 2023ம் ஆண்டு செப்ரெம்பர் 16ம் இலக்க சட்டத்தின்படி இலங்கை மத்திய வங்கியின் மையக்குறிக்கோள் யாது?
    1. விலை மற்றும் பொருளாதார உறுதியினை பேணுதல்.
    2. விலை மற்றும் நிதியியல் முறை உறுதியினை பேணுதல்.
    3. விலைமட்ட உறுதியினை பேணுதல்.
    4. நடு ஒற்றை இலக்கத்தில் (4% - 6%) பணவீக்கத்தினை பேணுதல்.
    5. உயர்மட்ட பொருளாதார வளர்ச்சி வீதத்தினை (8% - 10%) அடைதல்

42. திறந்த சந்தையில் அரச முறிகளைக் விற்பனை செய்யும் மத்திய வங்கியின் நடவடிக்கை காரணமாக
    1. வங்கிகளின் ஒதுக்குகள் அதிகரித்து பண அடித்தளம் விரிவடையும்.
    2. வங்கிகளின் ஒதுக்குகள் விழ்ச்சியடைந்து பண அடித்தளம் சுருக்கமடையும்.
    3. வங்கிகளின் ஒதுக்குகள் அதிகரித்து பண அடித்தளம் சுருக்கமடையும்.
    4. வங்கிகளின் ஒதுக்குகள் வீழ்ச்சியடைந்து பண அடித்தளம் விரிவடையும்.
    5. வங்கிகள் மிகை ஒதுக்குகளைக் கொண்டிருப்பின் வங்கிகளின் ஒதுக்குகள் வீழ்ச்சியடையும் ஆனால் பணநிரம்பல் அதிகரிக்கும்.

43. மத்திய வங்கியானது அதன் கொள்கை வட்டி வீதத்தினைக் குறைக்கும்போது பின்வருவனவற்றில் எது நடைபெறும்?
    1. பணக் கேள்வி வீழ்ச்சியடைவதுடன் சந்தை வட்டி வீதங்கள் வீழ்ச்சியடையும்.
    2. பணக் கேள்வி அதிகரிப்பதுடன் சந்தை வட்டி வீதங்கள் அதிகரிக்கும்.
    3. பண நிரம்பல் வீழ்ச்சியடைவதுடன் சந்தை வட்டி வீதங்கள் வீழ்ச்சியடையும்.
    4. பண நிரம்பல் அதிகரிப்பதுடன் சந்தை வட்டி வீதங்கள் வீழ்ச்சியடையும்.
    5. பணக் கேள்வி, பண நிரம்பல், சந்தை வட்டி வீதங்கள் ஆகியன அதிகரித்தல்.

44. வணிக வங்கிக் கட்டமைப்பிலுள்ள குறிப்பிட்ட வங்கியொன்றிடம் ரூபா 400 மில்லியன் ஒதுக்குகளும் ரூபா 3 500 மில்லியன் வங்கி வைப்புகளும் காணப்படுகின்றன. இந்நிலையில் வங்கி வாடிக்கையாளரொருவர் ரூபா 100 மில்லியன் புழக்கப் பணத்தை அவ்வங்கியில் வைப்பிலிடுகிறார். நியதி ஒதுக்கு வீதம் 10% ஆயின் அவ்வைப்பின் பின்னர் வங்கியிடமுள்ள மிகைஒதுக்குகளின் அளவென்ன?
    1. ரூபா மில்லியன் 380 ஆகும்.　　2. ரூபா மில்லியன் 360 ஆகும்.
    3. ரூபா மில்லியன் 240 ஆகும்.　　4. ரூபா மில்லியன் 140 ஆகும்.
    5. ரூபா மில்லியன் 40 ஆகும்.

(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

45. நியதி ஒதுக்குத்தேவை 15% சதவீதமாக இருப்பதாகவும், ஒரு வணிக வங்கி ரூபா 2 000 புதிய வைப்பினைப் பெறுவதாகவும் கருதுக. இதன் விளைவாக பின்வருவனவற்றுள் வங்கியின் ஐந்தொகையில் ஏற்படக்கூடிய மாற்றம் எது?

| | பொறுப்புகள் | தேவைப்படும் ஒதுக்குகள் |
|---|---|---|
| 1. | ரூபா 2000 இனால் அதிகரிக்கும் | ரூபா 1700 இனால் அதிகரிக்கும் |
| 2. | ரூபா 2000 இனால் அதிகரிக்கும் | ரூபா 300 இனால் அதிகரிக்கும் |
| 3. | ரூபா 2000 இனால் அதிகரிக்கும | மாறாதிருக்கும் |
| 4. | ரூபா 2000 இனால் குறையும் | ரூபா 300 இனால் குறையும் |
| 5. | ரூபா 2000 இனால் அதிகரிக்கும் | ரூபா 1700 இனால் குறையும |

46. தேவைப்படுத்தப்பட்ட ஒதுக்குவீதத்தைப் பேணும் ஒரு வணிக வங்கியிலுள்ள நடைமுறைக் கணக்கில் ஒரு நபர் 5000 ரூபாவை வைப்பிலிடுவாராயின் அதன் உடனடி விளைவாக ஏற்படுவது.

1. பண நிரம்பலில் 5000 ரூபா அளவினால் ஏற்படும் ஒரு வீழ்ச்சியாகும்.
2. பண நிரம்பலில் 5000 ரூபா அளவினால் ஏற்படும் ஒரு அதிகரிப்பாகும்.
3. பண நிரம்பலில் மாற்றமில்லை ஆனால் வங்கியில் தற்போது மிகை ஒதுக்குகள் இருப்பதனால் எதிர்காலத்தில் பண நிரம்பல் விரிவடையலாம்.
4. பண நிரம்பலில் 5000 ரூபாவினால் ஓர் அதிகரிப்பு ஏற்படும் ஆனால் வங்கியில் தற்போது மிகை ஒதுக்குகள் இருப்பதனால் எதிர்காலத்தில் பண நிரம்பல் மேலும் விரிவடையலாம்.
5. இந் நபர் சுற்றோட்டத்திலிருந்து வெளியே எடுத்த தொகைக்கு சமமான அளவினால் மிகை ஒதுக்குகளில் ஒரு வீழ்ச்சி ஏற்படும்.

47. சந்தைப் பொருளாதாரத்தில் வளங்களை வினைத்திறனாக ஒதுக்கீடு செய்வதற்கு எது தடையாகயிருக்கும்

1. பொதுப்பொருள் உற்பத்திக்கு சாதனங்கள் அதிகளவில் ஒதுக்கீடு செய்யப்படல்
2. பொதுவளங்களின் குறைப்பயன்பாடு
3. வருமானப் பங்கீட்டில் சமத்துவம் காணப்படுதல்
4. தகவல்களின் ஒத்தமைவின்மை
5. உற்பத்திகளில் தோன்றும் வெளிவாரிகளை கருத்தில் எடுத்து உற்பத்தி நடைபெறுதல்

48. பின்வருவனவற்றுள் எதனை தூய பொதுப்பண்டத்தின் (pure public goods) பண்பாக கருதுவீர்

1. நுகர்வில் போட்டித்தன்மையைக் கொண்டிருக்கும்
2. கொடுப்பனவைச் செய்ய இயலாதவர்கள் நுகர்விலிருந்து விலக்கப்படுவர்
3. எவரும் நுகர்வினை நிராகரிக்க முடியாது
4. விரும்பியவர்களுக்கு மட்டும் நுகர்வினை கட்டுப்படுத்தக் கூடியவை
5. உத்தம வெளியீட்டு மட்டத்தில் சந்தையினால் நிரம்பல் செய்யப்படுபவை

(All Rights Reserved/ *முழுப்பதிப்புரிமை உடையது*)

49.

| வருமானம் | செலுத்தப்படும் வரிப்பணம் |
|---|---|
| 40,000 | 4000 |
| 30,000 | 3000 |
| 20,000 | 2000 |
| 10,000 | 1000 |

மேலுள்ள தகவல்கள் அடிப்படையில் இது எந்த வரி விதிப்பு முறையை வெளிப் படுத்துகின்றது?

1. விருத்திமுறை வரி
2. தேய்வுமுறை வரி
3. ஒடுங்குமுறை வரி
4. வளர் வீத வரி
5. சமவிகித வரி

50. இலங்கை அரசாங்கத்தின் மீள்வரும் செலவுக்குள் உள்ளடங்காத விடயம் எது?

1. பொருட்கள் பணிகள் மீதான செலவுகள்
2. அரசாங்க ஊழியர்களுக்குரிய சம்பளக் கொடுப்பனவு
3. நடைமுறை மாற்றங்களும் மானியங்களும்
4. மீள்கொடுப்பனவுகளைக் கழித்த கடன் வழங்கல்
5. பொதுக் கடன்களுக்குரிய வட்டிக் கொடுப்பனவு

(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

FWC

# தேசிய வெளிக்கள நிலையம் தொண்டைமானாறு

## நான்காம் தவணைப் பரீட்சை - 2024

# National Field Work Centre, Thondaimanaru.

## 4th Term Examination - 2024

| | | | | |
|---|---|---|---|---|
| பொருளியல் - II<br>Economics - II | Three Hours 10 Min.<br>Gr : 13 (2024) | 21 | T | II |

பகுதி II

அறிவுறுத்தல் : உப பிரிவு **“அ”**, **“ஆ”** ஆகியவற்றிலிருந்து குறைந்தபட்சம் **இரண்டு** வினாக்களையேனும் தெரிவு செய்து எல்லாமாக **ஐந்து** வினாக்களுக்கு மட்டும் விடை எழுதுக.

**உப பிரிவு - ‘அ’**

(இப்பிரிவிலிருந்து குறைந்தபட்சம் **இரண்டு** வினாக்களை தெரிவு செய்க)

01. i. ஒரு பொருளாதாரத்தில் வள ஒதுக்கீடு தொடர்பான பிரச்சினைகள் எழுதுவதற்குரிய காரணங்கள் நான்கினை குறிப்பிடுக. **(4 புள்ளிகள்)**

ii. பொருளாதாரப் பண்டத்தின் பிரதான உடமைகள் யாவை? “பொருளாதாரப் பண்டத்தின் பயனாளர்கள் விலை செலுத்துவதன் மூலமே அவற்றை பெற்றுக் கொள்ளமுடியும்” இக்கூற்றின் நடைமுறைப் பொருத்தப்பாட்டினை விளக்குக? **(4 புள்ளிகள்)**

iii. சந்தைப் பொருளாதாரத்திலிருந்து கட்டளைப் பொருளாதாரம் எவ்வாறு வேறுபடுகின்றது? **(4 புள்ளிகள்)**

iv. சமூக சந்தைப் பொருளாதாரம் (Social Market Economy) என்பதிலிருந்து நீர் விளங்கிக்கொள்வது யாது? **(4 புள்ளிகள்)**

v. பின்வரும் நிகழ்வுகளை உற்பத்திசாத்திய வளையி வரைபடத்தில் வெளிப்படுத்துக.

(அ) கடும் வரட்சி காரணமாக மரக்கறிச் செய்கை பாதிக்கப்பட்டமை

(ஆ) பொருளாதார நெருக்கடி காரணமாக மூளைச்சாலிகள் வெளியேற்றம் அதிகரித்தமை

(இ) பொருளாதார நெருக்கடி காரணமாக நாட்டின் வேலையின்மை வீதம் அதிகரித்தமை.

(ஈ) சமூகம் விவசாய பண்டத்தினை அதிகளவிலும் கைத்தொழில் பண்டத்தினை குறைவாகவும் விரும்புகின்றமை. **(4 புள்ளிகள்)**

02. i. “சாதாரண பண்டம்” என்றால் என்ன? ஏனைய விடயங்கள் மாறாத நிலையில் சாதாரண பண்டத்தின் விலை அதிகரிக்கும்போது அதன் கேள்வித்தொகை குறைவது ஏன்? **(4 புள்ளிகள்)**

ii. X என்ற பண்டத்தின் சந்தையில் A, B, C என்னும் மூன்று நுகர்வோர்கள் உள்ளதாகக் கருதவும். A, B நுகர்வோரின் கேள்விச் சார்பும் சந்தைக் கேள்விச் சார்பும் பின்வருமாறு தரப்பட்டுள்ளது.

A நுகர்வோனின் கேள்விச் சார்பு $Qd_A = 300 - 2p$

B நுகர்வோனின் கேள்விச் சார்பு $Qd_B = 150 - p$

(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

சந்தைக் கேள்விச் சார்பு $Qd_M = 650 - 5p$

(a) C என்ற நுகர்வோனின் கேள்விச் சார்பினை உருவாக்குக. **(2 புள்ளிகள்)**

(b) X பண்டத்தின் விலை ரூபா 20 ஆகவுள்ள போது A, B, C ஆகிய நுகர்வோரின் கேள்வித்தொகையையும் சந்தைக் கேள்வித் தொகையையும் சந்தைக் கேள்வித் தொகையையும் கணிப்பிடுக. **(2 புள்ளிகள்)**

iii. ஏனையவை மாறாத நிலையில் பண்டமொன்றின் உற்பத்திச் செலவில் ஏற்படுகின்ற மாற்றமானது அப்பண்டத்தின் நிரம்பலில் எவ்வாறு மாற்றத்தினை ஏற்படுத்தும் என்பதனை விளக்குக. **(4 புள்ளிகள்)**

iv. அ. $Qd = \frac{200}{P}$ என்ற சார்புக்குரிய கேள்வி வளையியை வரைந்து காட்டுக? **(2 புள்ளிகள்)**

ஆ. தொடக்கப்புள்ளிக்கூடாகச் செல்லும் நேரான நிரம்பல் கோட்டின் எல்லாப்புள்ளிகளிலும் விலைசார் நிரம்பல் நெகிழ்ச்சி ஒன்றுக்கு சமனாக (PES=1) இருப்பதனை நிரூபிக்குக? **(2 புள்ளிகள்)**

v. A என்ற பண்டத்தின் கேள்வி, நிரம்பல் தொடர்பான தகவல்கள் பின்வருமாறு தரப்பட்டுள்ளது.

| விலை (P) ரூபா | கேள்வித்தொகை (Qd) (அலகுகள்) | நிரம்பல் தொகை (Qs) (அலகுகள்) |
|---|---|---|
| 100 | 20 | 60 |
| 50 | 40 | 30 |

அ) A பண்டத்திற்குரிய கேள்வி, நிரம்பல் சார்புகளை உருவாக்கி சமநிலை விலை தொகையை காண்க? **(02 புள்ளிகள்)**

ஆ) சமநிலை விலையில் உற்பத்தியாளன் மிகை, நுகர்வோர் மிகை ஆகியவற்றை கணிப்பிடுக? **(02 புள்ளிகள்)**

03. i. பண்டமொன்றின் மீது அரசாங்கம் மறைமுக வரியினை விதிக்கின்ற போது நுகர்வோர் மிகை(CS), உற்பத்தியாளன் மிகை(Ps), பொருளாதார மிகை(Es) மற்றும் மொத்த மிகை(Ts) ஆகியவற்றில் ஏற்படும் மாற்றங்களை வரைபின் மூலம் விளக்குக. **(4 புள்ளிகள்)**

ii. பண்டமொன்றின் மீது அரசாங்கம் அலகுவரியினை விதிக்கின்ற போதிலும் ஈடுசெய்ய முடியாத இழப்பு (DWL) பூச்சியமாகியிருக்கும் இரண்டு சந்தர்ப்பங்களை வரைபின் மூலம் விளக்குக. **(4 புள்ளிகள்)**

iii. X பண்டத்தின் சந்தைக் கேள்வி சார்பு $Qd = 900 - 10p$ எனவும் நிரம்பல் சார்பு $Qs = -200 + 10p$ எனவும் தரப்பட்டுள்ளது. இப்பண்டத்தின் உற்பத்தியாளர்களுக்கு அரசு அலகுக்கு ரூபா 10ஐ மானியமாக வழங்கும் போது,

அ. சமநிலை விலை, தொகை எவ்வளவாகக் காணப்படும்? **(2 புள்ளிகள்)**

ஆ. உற்பத்தியாளன் மிகை , தேறிய சமூகநல இழப்பு எவ்வளவாகக் காணப்படும். **(2 புள்ளிகள்)**

இ. அரசுக்கு ஏற்பட்ட செலவு எவ்வளவு? **(2 புள்ளிகள்)**

iv. அரசாங்கம் X என்ற பண்டத்திற்கு இழிவான உத்தரவாத விலையை நிர்ணயித்து அங்கு உருவாகும் மிகை நிரம்பலை கொள்வனவு செய்யும் போது ஏற்படும் விளைவுகளை வரைபின் மூலம் விளக்குக? **(6 புள்ளிகள்)**

(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

04. i. குறைந்து செல்லும் எல்லை விளைவு, குறைந்து செல்லும் அளவுத்திட்ட விளைவு ஆகிய இரண்டும் நிறுவனமொன்றின் செலவுகளை எவ்வாறு பாதிக்கும் என்பதனை விளக்குக. **(4 புள்ளிகள்)**

ii. குறுங்கால நிறுவனமொன்றின் சராசரி உற்பத்திக்கும் (Ap) சராசரி மாறும் செலவுக்கும் (AVC) இடையிலான தொடர்பினை விளக்குக. **(4 புள்ளிகள்)**

iii. அ) நிறைபோட்டிச் சந்தை ஆ) தனியுரிமைப் போட்டிச் சந்தை ஆகியவற்றின் பிரதான பண்புகளை பட்டியல்படுத்துக? **(4 புள்ளிகள்)**

iv. நிறைபோட்டித் தொழிலிலுள்ள நிறுவனமொன்று நட்டத்தினை அனுபவிக்கின்றது. அந் நிறுவனத்தின் மொத்த நட்டத் தொகையானது மொத்த நிலையான செலவின் பெறுமதிக்கு சமமானதாகக் காணப்படுவதாகக் கருதவும். இந் நிறுவனம் தொடர்ந்தும் தொழிலில் நிலைத்திருக்க முடியுமா? உமது விடையை தெளிவுபடுத்துக. **(4 புள்ளிகள்)**

v. உற்பத்திக் காரணியொன்றின் நிரம்பல் நெகிழ்ச்சியுள்ளதிலிருந்து நிரம்பல் நெகிழ்ச்சியற்றதாக மாற்றமடையும் போது மாற்றுக்கட்டணம், பொருளியல் வாடகையில் ஏற்படும் மாற்றங்களை பொருத்தமான வரைபடத்தின் மூலம் விளக்குக? **(4 புள்ளிகள்)**

05. i. "வர்த்தக சகடவோட்டம்" என்பதனை வரைவிலக்கணப்படுத்தி அதிலுள்ள நான்கு கட்டங்களையும் சுருக்கமாக விளக்குக? **(4 புள்ளிகள்)**

ii. கூட்டிய பெறுமதி எனும் எண்ணக்கருவிலிருந்து நீர் விளங்கிக்கொள்வது யாது? **(4 புள்ளிகள்)**

iii. வருமான அணுகுமுறையில் ஒருநாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்தியை (GDP) எவ்வாறு கணிப்பிட முடியும் என்பதனை கருதுகோள் எண்களைப் பயன்படுத்தி வெளிப்படுத்துக? **(4 புள்ளிகள்)**

iv. ஒரு நாட்டின் "இறுதி நுகர்வுச் செலவு" தரவாக தரப்படும் போது செலவிடத்தக்க மொத்த தேசிய வருமானத்தினை கணிப்பதற்கு தேவைப்படும் மேலதிக தகவல்கள் எவை? **(4 புள்ளிகள்)**

v. ஒரு நாட்டின் தேசிய கணக்கு தொடர்பான புள்ளிவிபரம் பின்வருமாறு தரப்பட்டுள்ளது. (பெறுமதிகள் பில்லியன் ரூபாவில்)

| | |
|---|---|
| • தனியார் நுகர்வு | 8000 |
| • பொது நுகர்வு | 7000 |
| • மொத்த உள்நாட்டு மூலதனாக்கம் | 4000 |
| • இருப்பு மாற்றம் | 200 |
| • பொருட்களின் தேறிய ஏற்றுமதி | -2200 |
| • பொருட்களின் இறக்குமதி | 6700 |
| • தேறிய நேரில் வரி | 600 |
| • வெளிநாட்டிலிருந்தான தேறிய முதன்மைவருமானம் | - 400 |
| • வெளிநாட்டிலிருந்தான தேறிய நடைமுறைமாற்றல்கள் | 600 |

பின்வருவனவற்றைக் கணிப்பிடுக

அ. சந்தை விலையில் மொத்த உள்நாட்டு உற்பத்தி. **(2 புள்ளிகள்)**

ஆ. செலவிடத்தக்க தேசிய வருமானம். **(2 புள்ளிகள்)**

(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

## உப பிரிவு "ஆ"

(இப்பிரிவிலிருந்து குறைந்தபட்சம் **இரண்டு** வினாக்களை தெரிவு செய்க)

06. i. திறந்த பொருளாதாரத்தின் சமநிலைத் தேசிய வருமானத்தினை வருமான செலவு அணுகுமுறையில் வெளிப்படுத்துக. **(4 புள்ளிகள்)**

ii. பொருளாதாரமொன்றின் பின்வரும் பேரினப் பொருளாதாரத் தரவுகளைக் கருத்திற் கொள்க.

$C = 100 + 0.8Y_D$ $I = 150$ $G = 200$ $T = 100$ $Tr = 50$

$Y_D$ = செலவிடத்தக்க தேசிய வருமானம் $C$ = நுகர்வு $I$ = முதலீடு

$G$ = அரசாங்கக் கொள்வனவுகள் $T$ = வரிகள் $Tr$ = மாற்றல்கள்

(அ) சமநிலைத் தேசிய வருமான மட்டம் யாது? **(02 புள்ளிகள்)**

(ஆ) முதலீட்டுப் பெருக்கியின் பெறுமதி யாது? **(02 புள்ளிகள்)**

iii. பொருளாதாரமொன்றின் சேமிப்பு சார்பு $S=-200+0.1yd$ எனத் தரப்பட்டுள்ளது. பின்வரும் பெருக்கியின் பெறுமதியினைக் கணிக்குக.

அ. அரச செலவுப் பெருக்கி ($K_Q$)

ஆ. வரிப் பெருக்கி ($K_T$)

இ. அரச மாற்றல் பெருக்கி ($K_{Tr}$)

ஈ. சமநிலை வரவு செலவுத்திட்டப் பெருக்கி ($K_B$) **(4 புள்ளிகள்)**

iv. கருதுகோள் பொருளாதாரமொன்றின் பேரினப் பொருளியல் தரவுகள் வருமாறு?

| | |
|---|---|
| மொத்த தேசிய வருமானம் (Y) | = 8000 பில்லியன் ரூபா |
| செலவிடத்தக்க தேசிய வருமானம் ($Y_d$) | = 7400 பில்லியன் ரூபா |
| தனியார் நுகர்வு (C) | = 7100 பில்லியன் ரூபா |
| அரச பாதீட்டுப் பற்றாக்குறை ($B_D$) | = 200 பில்லியன் ரூபா |
| அரச நடப்பு மாற்றல்கள் ($T_R$) | = 50 பில்லியன் ரூபா |
| வர்த்தக மீதி (TB) | = -300 பில்லியன் ரூபா |

இப் பொருளாதாரத்தின்

அ) அரசின் வரி வருமானம் (T)

ஆ) தனியார் முதலீடு (I)

எவ்வளவாகக் காணப்படும்? **(4 புள்ளிகள்)**

v. வீக்க இடைவெளி, சுருக்க இடைவெளி என்பவற்றை பொருத்தமான வரைபடத்தின் மூலம் விளக்குக? **(4 புள்ளிகள்)**

07. i. சட்டப்பணம், வங்கிப்பணம் மற்றும் அண்மிய பணம் ஆகியவற்றை வேறுபடுத்துக. **(4 புள்ளிகள்)**

ii. பணத்தின் ஊக நோக்கக் கேள்வி என்றால் என்ன? அதனை தீர்மானிக்கும் காரணிளான வட்டி வீதமும் பிணைப்பத்திரத்தின் விலையும் எவ்வாறு அப்பணக் கேள்வியுடன் தொடர்புபடுகின்றது என்பதனை விளக்குக. **(4 புள்ளிகள்)**

(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

iii. ஒன்றிணைக்கப்பட்ட விரிந்த பண நிரம்பல் (M2b) என்றால் என்ன? அதனை தீர்மானிக்கும் காரணிகள் யாவை? **(4 புள்ளிகள்)**

iv. பணச்சுருக்கம் என்றால் என்ன? அதன் அனுகூலங்கள் நான்கினைக் குறிப்பிடுக. **(4 புள்ளிகள்)**

v. ஒரு நாட்டின் பணநிரம்பல் 10% அதிகரிப்பு ஏற்படும் போது கட்டாயமாக பொது விலைமட்டத்திலும் 10% அதிகரிப்பு ஏற்படுமா? உமது விடையை தெளிவுபடுத்துக? **(4 புள்ளிகள்)**

08. i. இடைத்தரகு நிதி நிறுவனம் என்றால் என்ன? இலங்கையில் காணப்படும் இடைத்தரகு நிதி நிறுவனத்தில் நான்கினைக் குறிப்பிடுக. **(4 புள்ளிகள்)**

ii. வட்டி வீதத்தில் ஏற்படுகின்ற வீழ்ச்சியானது எவ்வாறு கேள்வித்தூண்டல் பணவீக்கத்திற்கு வழிவகுக்கும் என்பதனை பொருத்தமான வரைபடத்தின் மூலம் விளக்குக. **(4 புள்ளிகள்)**

iii. இலங்கை மத்திய வங்கி பண நிரம்பலாகக் குறைப்பதற்காக அண்மையில் மேற்கொண்ட நடவடிக்கைகள் மூன்றினை விளக்குக. **(6 புள்ளிகள்)**

iv. உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளின் தொழிற்பாட்டினையும் நோக்கங்களையும் தெளிவுபடுத்துக. **(6 புள்ளிகள்)**

09. i. "சந்தைத் தோல்வி" என்றால் என்ன? அதற்குரிய நான்கு காரணிகளை குறிப்பிடுக? **(4 புள்ளிகள்)**

ii. தூயபொதுப்பண்டம் (Pure Public Goods) என்றால் என்ன? நான்கு உதாரணத்தினையும் குறிப்பிடுக. **(4 புள்ளிகள்)**

iii. உற்பத்தியில் எதிர்க்கணிய வெளிவாரி விளைவு காணப்படும் போது சமூக உத்தம மட்ட வெளியீட்டினை விட சந்தை வெளியீடு ஏன் அதிகமாகக் காணப்படும் என்பதனை பொருத்தமான வரைபடத்தின் மூலம் விளக்குக. **(4 புள்ளிகள்)**

iv. நுகர்வில் நேர்க்கணிய வெளிவாரி விளைவு என்றால் என்ன? தனிநபர் ஒருவர் நேர்க்கணிய வெளிவாரி விளைவை ஏற்படுத்தும் நுகர்வில் ஈடுபடும் போது ஏன் வள ஒதுக்கீட்டில் வினைத்திறன் ஏற்படுவதில்லை என்பதனை பொருத்தமான வரைபடத்தின் மூலம் விளக்குக? **(4 புள்ளிகள்)**

v. அரச தோல்வி என்றால் என்ன? அதற்குரிய காரணங்களையும் குறிப்பிடுக. **(4 புள்ளிகள்)**

10. i. நேர்வரி, நேரில் வரி இரண்டினையும் தெளிவாக வேறுபடுத்துக. **(4 புள்ளிகள்)**

ii. இலங்கை அரசாங்கத்தின் வரிவருமானத்தில் நேர்வரியின் பங்கு அதிகரிப்பதன் முக்கியத்துவத்தினை சுருக்கமாக விளக்குக? **(4 புள்ளிகள்)**

iii. சிறந்த வரியொன்றில் காணப்படும் பண்புகளைக் குறிப்பிட்டு அதிலொன்றை சுருக்கமாக விளக்குக? **(4 புள்ளிகள்)**

iv. வரியின் மிகைச்சுமை (Excess Burden of taxation) என்பதனால் கருதப்படுவதென்ன? வரியின் மிகைச்சுமை பூச்சியமாகக் காணப்படும் சந்தர்ப்பம் ஒன்றினையும் பொருத்தமான வரைபடத்தின் மூலம் வெளிப்படுத்துக. **(4 புள்ளிகள்)**

v. இலங்கை அரசின் நடைமுறைச் செலவின் பொருளாதார வகைப்படுத்தலை வெளிப்படுத்துவதோடு 2022ம் ஆண்டின் அச்செலவுக் கட்டமைப்பினையும் வெளிப்படுத்துக. **(4 புள்ளிகள்)**